கிறிஸ்து இயேசுவில் பிரியமானவர்களே,

**" நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர் " - திருப்பாடல் 4:32**

மேற்கூறிய இந்த இறைவார்த்தையின் செயல்பாடுதான் இன்று நாம் 10- ஆம் ஆண்டு விழா கொண்டாடும், பெர்த் நகர தமிழ் திருஅவையின் சிறந்த பொன்னாள்.

கல் தோன்றி மண் தோன்றா காலத்தே தோன்றிய மூத்த குடி தமிழ் குடி, அந்த வகையிலே தோன்றிய மூத்த மொழி, அமுதமொழி, இனிய தேன் மொழி நம் தமிழ் மொழி. இந்த நம் தாய் மொழியிலே இறைவனை போற்றவும், புகழவும், ஆராதிக்கவும், துவங்க பட்டு இன்று பத்தாண்டு நிறைவு விழா கொண்டாடும் தமிழ் கத்தோலிக்க திரு அவையை மனதார போற்றுகிறோம், பாராட்டுகிறோம்.
இறைவனுக்கு எம் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி செலுத்துகிறோம்.

கடந்த ஆண்டுகளில், கரம் பற்றி வழிநடத்திய நம் கடவுள் இனி வரும் நாட்களிலும் தன் வலகரத்தால் தாங்கி நிறைவாக ஆசீர்வதிப்பார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.
தமிழ் கூறும் மக்களின் ஆன்மிக வாழ்வு மென்மேலும் சிறந்திட, முழுமையாய் மலர்ந்திட, முழுமையை நோக்கி நடந்திட இன்னும் பற்பல ஆண்டு நிறைவு விழாக்களை கண்டிட உளமார ஜெபிக்கின்றோம், எம் வாழ்த்துக்களை உரித்தாக்குகின்றோம்.

***இறையாசீர் உங்களனைவரோடும் இருப்பதாக!***

ஜெபங்களுடனும், வாழ்த்துக்களுடனும்,
மரியின் ஊழியர் சபை
நார்தம்

